குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை

(2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது)

பதவி வெற்றிடங்கள்

குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகைமை பெற்ற இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) - 01 வெற்றிடம்

கல்வித் தகைமைகள்:

விண்ணப்பதாரர்கள் அனைவரும் கீழே உள்ள (i) அல்லது (ii) இன் கீழ் தொடர்புடைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

i. சட்டம், வியாபார நிர்வாகம், பொது நிர்வாகம், பொருளியல், நிதி முகாமைத்துவம், வணிகவியல் ஆகிய பாடத் துறையில் அல்லது இந்தப் பதவியுடன் தொடர்புடைய பிற பாடத் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், வியாபார நிர்வாகம், பொது நிர்வாகம், பொருளாதாரம், நிதி முகாமைத்துவம், வணிகவியல் அல்லது இந்த பதவி தொடர்புடைய பிறதுறையில் முதுகலைப் பட்டம் (Masters) பெற்றிருத்தல்

மற்றும்

முதல் பட்டம் பெற்ற பிறகு, அரச கூட்டுத்தாபனம் ஒன்றில், சட்டப்பூர்வ சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் (20) ஆண்டுகள் அனுபவமும், இதில் சிரேஷ்ட நிறைவேற்று /உயர்மட்ட முகாமைத்துவ மட்டத்தில் 5 வருடங்கள் அனுபவமும் பெற்றிருத்தல்

ii. சட்டம், வியாபார நிர்வாகம், பொது நிர்வாகம், பொருளியல், நிதி முகாமைத்துவம், வணிகவியல் ஆகிய பாடத் துறையில் அல்லது இந்தப் பதவியுடன் தொடர்புடைய பிற பாடத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

குறித்த பாடத் துறையில் கலாநிதி பட்டம் (PhD) பெற்றிருத்தல்

மற்றும்

கலாநிதி பட்டம் (PhD) பெற்றதன் பிறகு அரசாங்கத்தின் அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் சட்டப்பூர்வ சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையில் முகாமைத்துவப் மட்டத்தில் குறைந்தபட்சம் (20) ஆண்டுகள் அனுபவமும், இதில் சிரேஷ்ட நிறைவேற்று /உயர்மட்ட முகாமைத்துவ மட்டத்தில் (05) வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல்

வயது எல்லை:

35 வயதுக்கு குறையாமலும், 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவு:

ரூபா. 500,000 - ரூபா. 25,000 x 9 - ரூபா. 725,000

உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவு உண்டு.

2. பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) - 01 வெற்றிடம்

i. கல்வித் தகைமைகள்:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வியாபார முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், வணிக நிர்வாகம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வணிகவியல், நிதியியல், கணக்கியல் ஆகிய துறைகளில் அல்லது இப்பதவியுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

இத்தோடு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வணிக முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், வணிக நிர்வாகம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வணிகவியல், நிதியியல், கணக்கியல் அல்லது இப்பதவியுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

இப்பதவியுடன் தொடர்புடைய பாடத்துறைக்கு பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனம் ஒன்றில் உறுப்புரிமை பெற்றிருத்தல்.

மற்றும்

முதலாவது பட்டப்படிப்புத் தகைமையைப் பெற்ற பின்னர், அரசாங்க அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் சட்டப்பூர்வ சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையில் முகாமைத்துவப் மட்டத்தில் (12) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல்.

வயதெல்லை:

35 வயதுக்கு குறையாமலும், 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவு:

HM 1-1-2025 - ரூ. (140,640 - 15 x 4,100 - 202,140)

உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவு உண்டு.

3. பணிப்பாளர் சபைச் செயலாளர் (Board Secretary) – 01 வெற்றிடம்

(கீழே உள்ள (i) அல்லது (ii) இன் கீழ் தொடர்புடைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம்,முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், பொது நிர்வாகம், வணிகவியல் ஆகிய துறைகளில் அல்லது இப்பதவியுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் பட்டம் பெற்றிருத்தல்

இத்தோடு

நிறுவனச் செயலாளர் மற்றும் நிறுவன ஆளுகை அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தொழில்முறைத் தகைமையுடன், நிறுவனச் செயலாளரின் பணிகள் மற்றும் நிறுவன ஆளுகை தொடர்பான சேவையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

ii. இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக பயிற்சி பெற்றிருப்பதுடன், நிறுவனச் செயலாளர் பணிகள் மற்றும் நிறுவன ஆளுகை தொடர்பான சேவையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

வயதெல்லை:

22 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவு:

MM 1-1-2025 - ரூ. (91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240)

பொதுவான நிபந்தனைகள்:

அ. தகைமைகள்:

i. விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்,
ii. நல்ல உடல் மற்றும் மனநலம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iii. நற்பெயருடையவராக இருத்தல் வேண்டும்.

ஆ. விண்ணப்பதாரர்கள் அனைவரும் குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலமே தேர்வு செய்யப்படுவர்.

இ. பதவிக்குரிய மேற்கண்ட தகுதிகளும் அனுபவங்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியாகின்ற போது பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், அதனை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்).

ஈ. மேற்கண்ட தேவைகளுக்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள், அரைகுறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு தகுதியற்ற செல்வாக்கு செலுத்துதலும் தகுதியின்மையாகக் கருதப்படும் என்பதுடன், நேர்முகப்பரீட்சை சபையின் முடிவே இறுதியானதாகும்.

மேற்படி தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பதாரர்களின் உறவினர்கள் அல்லாத விசாரிக்கக்கூடிய இருவரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் உள்ளடக்கக்கப்பட்ட முழுமையான சுயவிபரக் கோவை மற்றும் இரண்டு நற்பெயர் சான்று வழங்குபவர்களின் விபரங்களுடன் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை 2026 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் உறையின் மேல் இடது மூலையில்,'(விண்ணப்பிக்கும் பதவி), குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை' எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

தலைவர்,
குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு,
இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு -10.